# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1986 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கையில் உறுதிநிலைவாய்ந்த நற்செய்தித் திருச்சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1986, ஒக்ரோபர் மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1986, ஒக்ரோபர் மாதம் 10 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

---

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 90* *தபாற் செலவு : சதம் 75*

**1986 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கையில் உறுதிநிலைவாய்ந்த நற்செய்தித் திருச்சபை (கூட்டிணைத்தல்) சட்டம்**

*[1986 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

ச. வ.—ஓ. 78/84
1716

**இலங்கையில் உறுதிநிலைவாய்ந்த நற்செய்தித் திருச்சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

**முன்னுரை.**

"உறுதிநிலைவாய்ந்த நற்செய்தித் திருச்சபை" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதும், இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை விசுவாசிக்கின்ற பலரைக் கொண்டுள்ளதுமான கழகமொன்று, உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட, விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டுநடாத்தியுள்ளதுடன், கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களுக்கு நன்மை பயக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, இலங்கையில் உறுதிநிலைவாய்ந்த நற்செய்தித் திருச்சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**இலங்கையில் உறுதிநிலைவாய்ந்த நற்செய்தித் திருச்சபையைக் கூட்டிணைத்தல்.**

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், திருச்சபையினது பணிப்பாளர்கள் சபையின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள எந்த ஆட்களுடைய பெயர்கள் இதற்கான முதலாம் அட்டவணையில் காணப்படுகின்றனவோ அந்த ஆட்களும், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்ற முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களான அவர்களது வழியுரிமையாளர்களும் உட்பட, (இதனகத்துப்பின்னர் "திருச்சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கையில் உறுதிநிலைவாய்ந்த நற்செய்தித் திருச்சபையின் தற்போதைய உறுப்பினர்களாகவிருக்கின்றவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தில் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் "இலங்கையில் உறுதிநிலைவாய்ந்த நற்செய்தித் திருச்சபை" என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறு வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாதல் வேண்டும் : அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுத்தல் வேண்டுமென்பதுடன் வழக்குத் தொடுக்கலாம் ; அதற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வழக்குத் தொடுக்கவும் படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும்

2—எ 092839—2790 (84/11)

பயன்படுத்தவும், விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் புதுப்பிக்கவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டும் :—

(அ) இதனகத்துப்பின்னர் "தாய்த் திருச்சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும் ஐக்கிய அமெரிக்க நாடுகள், கலிபோனியா, லொஸ் எஞ்சலில், கிளென்டெல் போல்வார்ட், 1100 ஆம் இலக்கத்திலுள்ள உறுதிநிலைவாய்ந்த நற்செய்தி சருவதேச திருச்சபை என்ற தாய்த் திருச்சபையின் தாபகரான அயிமீ செம்பிள் மக்பேர்சன் என்பவரால் தொகுக்கப்பட்டதும், இதற்கான இரண்டாம் அட்டவணையில் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டதும் தரப்பட்டதுமான "விசுவாசப் பிரமாணக் கூற்றில்" அளிக்கப்பட்டவாறு உறுதிநிலைவாய்ந்த நற்செய்தியில் தழுவப்பட்ட மதக் கோட்பாடுகளைப் பரப்புதலும் பாவச் செய்தலும் ;

(ஆ) இப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை முன்னெடுத்துச்செல்வதில் தரும, மத அல்லது கல்விசார் நோக்கங்களுக்காகப் புறநீங்கலாகத் தொழிற்படுதலும், அத்துடன்—

(i) பொருத்தமான ஒழுங்கமைப்புக்களைத் தாபித்தலும் பேணுதலும் நடாத்துதலும், அத்துடன் கூட்டுத்தாபனத்துடனுன உறவு முறையில் அத்தகைய ஒழுங்கமைப்புக்களின் உறுப்பினர்களது அலுவல்களை மேற்பார்வை செய்தலும் ;

(ii) கூட்டுத்தாபத்தின் பணிப்பளார் சபையால் பிரகடனப் படுத்தப்படுகின்றவாறுன விதிகளுக்கிணங்க, இலங்கையிலும் எல்லா வெளிநாடுகளிலும் திருச்சபையின் சுவிசேஷத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு நற்செய்தியின் குரவர்களுக்கும் திருமறைப்போதகர்களுக்கும் உரிமமளித்தலும் அத்துடன் அவர்களைத் திருநிலைப்படுத்தலும் ;

(iii) கல்லூரித் தரத்திலானவையும் அத்தகைய தரத்திற்குக் குறைவான ஏதேனும் தரத்திலானவையுமான பாடசாலைகளைத் தாபித்தலும் சொந்தமாக வைத்திருத்தலும் தொழிற்படுத்தலும் ;

(iv) விசுவாசப் பிரமாணக் கூற்றில் எடுத்துக்கூறப்பட்ட கோட்பாடுகளுக்கு இயைய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட விதிகளுக்குக் கிணங்க இலங்கையிலும் எல்லா வெளிநாடுகளிலும் நற்செய்தியை முன்னெடுத்துச் செல்வதனை மேம்படுத்த முயல்வதற்குத் திருமறைப் போதக முயற்சிகளைத் தாபித்தலும், பேணுதலும், நடாத்துதலும் ;

(v) இலங்கையில் உறுதிநிலைவாய்ந்த நற்செய்தியின் விசுவாசிகளுடைய அக்கறைகளை மேம்படுத்தலும், பேணிவளர்த்தலும், பாதுகாத்தலும், அத்துடன் அத்தகைய ஆட்களின் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பாதுகாத்தலும் ;

(vi) இலங்கையில் உறுதிநிலைவாய்ந்த நற்செய்தியைப் பரவச் செய்தற்கும் பரப்புதற்கும் என, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, திருச்சபைகளையும் சமய ஒழுங்கமைப்புகளையும் தாபித்தல் ;

(vii) தருமஞ்சார் செயற்பாடுகளையும் மானிட அபிவிருத்திச் செயற்பாடுகளையும் பொறுப்பேற்றல் ;

(viii) இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கற்பதன்மூலமும் கடைப்பிடிப்பதன்மூலமும் மனித குலத்தின் ஆன்மீக முன்னேற்றத்துக்கு அவசியமானவையும் உகந்தவையும் எனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்தல் ;

(ix) ஏதேனும் நோக்கத்தை எய்துவதற்கு அல்லது இதனகத்துக் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களுள் ஏதேனும் ஒன்றை அல்லது பலவற்றை அல்லது அதற்கு உகந்ததென அல்லது அதற்கு உசிதமானதென ஏதேனும் நோக்கில் தோன்றுகின்ற குறிக்கோள்களை அடைவதற்கு அவசியமான, பொருத்தமான அல்லது வசதியான எவையேனும் அல்லது எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும், அவை அத்தகைய நோக்கங்களை எய்துவதற்கு அல்லது அத்தகைய குறிக்கோள்களை அடைவதற்கு ஏற்புடையனவாகக்கூடிய எவையேனும் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இல்லாதிருப்பின், செய்தல் ;

4. (1) கூட்டுத்தாபனமானது இலாபம் ஈட்டாத ஓர் ஒழுங்கமைப்பாக ஒழுங்குபடுத்தப்படுதலும் தொழிற்படுத்தப்படுதலும் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனத்தினது ஆதாயங்களின், இலாபங்களின் அல்லது பங்கிலாபங்களின் பாகமெதுவும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலும் ஆகாது. கூட்டுத்தாபனமானது இலாபம் ஈட்டாத ஓர் ஒழுங்கமைப்பாக இருத்தல்.

(2) கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் சந்தர்ப்பத்தில், அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் செலுத்தப்பட்டபின்னர் எஞ்சியிருக்கும் எல்லாச் சொத்துக்களும், புறநீங்கலாக மத, தரும அல்லது கல்விசார் நோக்கங்களுக்கெனத் தாபிக்கப்பட்ட அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட ஏதேனும் நிதியத்திற்கு அல்லது ஒழுங்கமைப்புக்கு அல்லது அதன் நன்மைக்கெனப் புறநீங்கலாகக் கையுதிர்க்கப்படுதல் வேண்டும்.

5. கூட்டுத்தாபனமானது அதன் செயற்பாடுகளின் ஏதேனும் பாகமாக ஏதேனும் பிரசாரத்தைக் கொண்டுநடாத்துதலோ அல்லது வேறுவகையில் சட்டவாக்கத்தின்மீது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தலாகாதென்பதுடன், பகிரங்கப் பதவிக்கான எவரேனும் வேட்பாளரின் சார்பில் ஏதேனும் அரசியல் இயக்கத்தில் பங்குகொள்ளுதலும் ஆகாது. கூட்டுத்தாபனம் அரசியலில் ஈடுபடுதலாகாது.

தாய்த்திருச் சபைக்குத் திருநிலை சார்ந்த கீழமைவு.

6. கூட்டுத்தாபனமானது தாய்த் திருச்சபைக்குத் திருநிலை சார் கீழமைவு உள்ளதாகவிருத்தல் வேண்டும்; ஆனால் சுயேச்சையாக செயலாற்றுவதற்கும், சொல்லப்பட்ட தாய்த் திருச்சபையின் வெளிப்படுத்தப்பட்ட கோட்பாடுகளுக்கும் பூட்கைகளுக்கும் முரணாக அல்லது ஒவ்வாதவையாக இராதவையும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையுமான எவையேனும் அல்லது எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்வதற்குமான முழுச் சுதந்திரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை.

7. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐவருக்குக் குறையாதோரும் பன்னிரண்டுக்கு மேற்படாதோருமான உறுப்பினர்களைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் " சபை " எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வரும்நேரத்தில் பதவி வகிப்பவர்களும், இதற்கான முதலாம் அட்டவணையில் பெயர்கள் குறித்துரைக்கப்படுகின்றவர்களுமான திருச்சபையின் பணிப்பாளர்சபை உறுப்பினர்கள், முதலாவது பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களாதல் வேண்டும்.

கூட்ட நடப்பெண்.

8. சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்தாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

9. (1) சபையானது, முறையான அறிவித்தலின் பின்னர் நடாத்தப்படும் அதன் கூட்டங்களில் ஏதேனும் நேரத்திலும், அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினாலும், பின்வருவனவற்றிற்காக இச்சட்டத்திற்கு அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல்;

(ஆ) சபையினதும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு உள்ளூர்த் திருச்சபைகளினதும், அலுவலர்களினதும் முகவர்களினதும், சேவையாளர்களினதும் கடமைகளை நடாத்துதல்;

(இ) அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களது அல்லது சபை உறுப்பினர்களது தேர்தலும் அல்லது நியமனமும் அத்துடன் அவர்களது பதவிக்காலமும்;

(உ) கூட்டுத்தாபனத்தின் தகுந்த நிருவாகத்தின் இடைநேர்வினவானவையும் அதனோடு சம்பந்தப்பட்டவையுமான அத்தகைய வேறு நோக்கங்கள்.

(2) கூட்டுத்தாபனத்தின் விதிகள், அவை ஆக்கப்படும்போது அதே போன்ற ஒரு கூட்டத்தில் மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

10. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லோரும், எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைய விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும். உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

11. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவின், மானியக் கொடையின், கொடையின், இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் பயனாக அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க உள்ள முழுத் தத்துவத்துடன், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

12. இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில் உளதாயிருக்கும் திருச்சபையின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், திருச்சபைக்குக் கொடுக்குமதியாயிருக்கும் எல்லாத் தனிசுகளும் திருச்சபைக்குச் செலுத்தப்படற்பாலனவான எல்லா ஒப்பப்பணங்களும் உதவு தொகைகளும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும். கூட்டுத்தாபனத்தால் கொடுக்குமதியாகவுள்ளனவும் அதற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

13. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டுத்தாபனத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்; இத்தத்துவத்துள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், தொழிற்படுத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றிப் பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதிகளை முதலீடு செய்யவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்கும் ஆன தத்துவங்களும் அடங்கும். கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

14. கூட்டுத்தாபனமானது அதன் சொந்த அலுவலகம் ஒன்றினை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், அதன் பொது இலச்சினையானது சபைத் தவிசாளரின் கட்டுக்காப்பில் இருத்தலும் வேண்டும்; அத்துடன் இலச்சினையானது, தவிசாளரின் முன்னிலையிலும் அத்துடன் பொருளாளர் முன்னிலையிலும் அல்லது சபையின் வேறு ஓர் உறுப்பினரின் முன் கூட்டுத்தாபனத்திற்கு அலுவலகமொன்று இருத்தல் வேண்டும்.

னிலையிலும் அல்லாது, எத்தகையதுமான சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப்படலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் அவர்களது பெயர்களைக் கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதல், எவரேனும் ஆள் அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் சாட்சியாகக் கையொப்பமிடுதலுக்குத் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.

15. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

## முதலாம் அட்டவணை

1. வண. லெஸ்லி டபிள்யூ. கீகல், தலைவர்/தவிசாளர், 381/1, ஹயிலெவல் தெரு, கங்கொடவில, நுகேகொடை.
2. பாதிரியார் எஸ். ஜீ. நிரஞ்சன், உபதலைவர், 381/1, ஹயிலெவல் தெரு, கங்கொடவில, நுகேகொடை.
3. பாதிரியார் பி. ஏ. ஜீ. மென்டிஸ், பொருளாளர், 28/16, வீரபுரனப்பு மாவத்தை, மொறட்டுவை.
4. பாதிரியார் டேல் எம். ஜயசூரிய, செயலாளர், ஹெலின் பலஸ்ஸ, நிக்கவரட்டிய.
5. பாதிரியார் ஜீ. ஜேசுராசா (உறுப்பினர்), 82/3, ஸ்டேசன் வீதி, அப்புத்தளை.
6. பாதிரியார் ஜீ. ராஜாமணி (உறுப்பினர்), 44, ஜாவா ஒழுங்கை கொழும்பு 2.

## இரண்டாம் அட்டவணை

### விசுவாசப் பிரமாணக் கூற்று

அயிமீ செம்பிள் மக்போசன் என்பவரால் தொகுக்கப்பட்டது.

1. மூல விவிலிய நூல்களின் சொல் சார்ந்த அருட்கிளர்ச்சியை ;
2. நித்திய இறைமையின் முழுமையான திருத்துவத்தை ;
3. நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தை ;
4. தூய ஆவியின் ஆளுமையையும் தெய்வீகத்தையும் ;
5. பசாசின் மெய்யியல்பையும் அதன் ஆளுமையையும் ;
6. மானிட குலத்தின் இயல்பான பழிசூழ்வு நிலையை ;
7. மாற்றீடு சார்ந்த ஒப்புரவை ;
8. கிறிஸ்துவின் இரத்தத்தால் மட்டுமே கிட்டும் பாவப் பரிகாரத்தை ;
9. பணிகளால் அல்லாது விசுவாசத்தின் ஊடாக அருளின் மூலம் பெறற்பால தான முழு இரட்சணியத்தை ;
10. ஒப்புரவின்மூலம் தெய்வீக முறையில் பிணி நீக்கத்தை ;
11. பிணியாளருக்குத் தைலத்தால் அபிஷேகம் செய்தலையும் அவர்களுக்காக மன்றாடுதலையும் ;
12. சீடர்களால் பெறப்பட்டவாறு பரிசுத்த ஆவியின் நேரடியான திருமுழுக்கை ;
13. புதுப்பிறப்பின் அவசியத்தை ;
14. விவரம் தெரிந்த வயதில் தோய்வின் மூலம் நீரினால் பெறும் திருமுழுக்கை ;
15. இரத்தத்தினால் கழுவப்பட்ட எல்லா விசுவாசிகளும் அடங்கிய ஒரேயொரு உண்மைத் திருச்சபையை ;
16. புற மதத்தவர்களுக்கும் உலக நாடுகளுக்கும் விவிலியத்தைப் போதித்தலை ;
17. தீவிரமான மதவெறிக்கும், மிகையான வெளிச்சடங்குகளில் மிகுந்த ஆர்வத்துக்கும் இடையிலான பொதுவழிபாட்டில் நடுவழிக்கொள்கையை ;
18. குடியியல் அரசாங்கத்துக்குப் கீழ்ப்படிதலை ;
19. புதிய ஏற்பாட்டுத் திருமறைக்கோட்பாடு சார்ந்த ஏதுக்களின்மீது மட்டும் மணநீக்கத்தை ;
20. திருச்சபையின் ஆட்சியையும், இறைவனில் எம்மீது அதிகாரமுள்ளவர்களுக்குப் பிரமாணிக்கத்தையும் கீழ்ப்படிதலையும் ;
21. கர்த்தரின் நிதித் திட்டமாக பதினொயந் செய்தலை ;
22. கூடுமானபொழுதெல்லாம் கடந்தகால தவறுகளுக்குப் பரிகாரம் செய்தலை ;
23. ஆண்டவரின் இராப்போசனத்தில் திறந்த பந்தியை ;
24. மீண்டும் மீண்டும் தவறுகள் புரியவும், மறையுண்மைகளை எதிர்க்கவும், தொலைந்து போகவும் கூடிய மனிதனுடைய சுதந்திரமான, நீதிமுறை சார்ந்த மனவலிமையை ;

25. நற்பணிகளைப் பேணுதலையும், பரிசுத்த வாழ்க்கை வாழ்வதையும் ;

26. விவிலியத்தைக் கற்பதன்மூலமும் இடையறாத செபவாழ்க்கையின் மூலமும் பாவத்தையும், தான் என்ற அகந்தையையும் தீய பழக்கவழக்கங்களையும் வென்று வாழும் வாழ்க்கையை ;

27. முழுமையான சரணாகதியின் மூலமும் அர்ப்பணிப்பின் மூலமும் கிறிஸ்தவ நிறைவையும் புனிதத்தன்மையையும் ;

28. ஆடை, உடுபுடவை, ஆபரணம் அணிவதில் கிறிஸ்துவ தன்னடக்கத்தை ;

29. ஆண்டவரின் தினத்தை ஒரு சட்டமாக அல்லாமல் ஒரு சிறப்புரிமையாக அனுசரிப்பதை ;

30. பொழுதுபோக்கைப் பொறுத்தளவில், மனச்சான்றின் சுதந்திரத்தையும் உலகிற்கு ஒரு தெய்வீக உதாரணத்தையும் ;

31. ஆன்மாவின் அழியாமையையும் உணர்வு நிலையான நிலைபேற்றையும் ;

32. எமது சரீரத்தினதும், நீதிமான்களினதும் நீதி நெறி தவறியவர்களினதும் உயிர்ப்பை ;

33. உண்மையான எல்லா விசுவாசிகளுக்கும் விண்ணரசையும் நித்திய வாழ்வையும் ;

34. பழிபாவத்துக்கு அஞ்சாத கயவர்களின் இறுதி நடுத்தீர்வை தினத்தை ;

35. கழிவிரக்கமற்றவர்களுக்கு நித்திய தண்டனையை ;

36. மண்ணுலகில் தமது சகல புனிதர்கள் சகிதம் கிறிஸ்துவின் நேரடியான, நேருண்மையான 1000 ஆண்டு அரசாட்சியை ;

37. இயேசு கிறிஸ்துவின் நேரடியான, நேருண்மையான, உடலியல்பான திருவாயிரத்துக்கு முற்பட்ட வருகையை ;

38. புனிதர்கள் அவர்களது நற்செயல்களுக்காகவும் தவிர்ப்புகளுக்காகவும் இறுதியாக சன்மானம் பெறும் நடுத்தீர்ப்பின் இருப்பிடத்தை ;

39. கிறிஸ்துவ விசுவாசத்தின் எல்லாப் பிரிவுகளினதும் கிறிஸ்துவ சகிப்புத் தன்மையை ;

40. தலையாய கொள்கையில்—ஐக்கியத்தையும், தலையாய கொள்கையல்லாத விடயங்களில்—சுதந்திரத்தையும் ; எல்லா விடயங்களிலும்—அருளிரக்கத்தையும்,

நாம் விசுவாசிக்கின்றோம்."

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*